## ‘ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை’ – கழகத் தலைவர் ஆணைக்கு


# இளைஞர் அணி நிர்வாகிகள் முழு ஒத்துழைப்பை வழங்கிடுங்கள்!

### சென்னையில் கழகத் தலைவர் தலைமையில் நடைபெற்ற – ஆலோசனைக் கூட்டத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சிமிகு உரை!

**சென்னை, ஜீன். 8-**

**சென்னையில் கழகத் தலைவர் தலைமையில் நடைபெற்ற, மாவட்டக் கழகச் செயலாளர்கள் - நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் - தொகுதிப் பார்வையாளர்கள் கலந்து கொண்ட ஆலோசனைக் கூட்டத்தில் இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு எழுச்சி மிக்க உரையாற்றினார்.**





அப்போது, “கழகத்தின் வலிமையை மென்மேலும் கூட்டிட, `ஓரணியில் தமிழ்நாடு’ என்ற உறுப்பினர் சேர்ப்புத் திட்டத்தை உடன்பிறப்புகள் வீடு வீடாகச் சென்று மேற்கொள்ள வேண்டும் என மதுரை பொதுக் குழுவில் சிறப்புத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றினார் கழகத் தலைவர்-மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். அதனைச் சிறந்த முறையில் செயல்படுத்த, கழக இளைஞர் அணியில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை எடுத்துக்கூறி, `ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை’க்கு இளைஞர் அணி தனது முழு ஒத்துழைப்பை வழங்கிடும் என எழுச்சிமிக்க உரையாற்றினார்.

மேலும் “2026 சட்டமன்றத் தேர்தலில் கழகம் மகத்தான வெற்றி பெற்று ஆட்சியைத் தொடர, ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் 30 சதவிகிதத்துக்கும் அதிகமான வாக்காளர்களை கழக உறுப்பினர்களாக இணைக்க உறுதியேற்போம்” என்றும் குறிப்பிட்டார்.

இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய எழுச்சிமிக்க உரை வருமாறு:

ஜீன் 1-ஆம் தேதி மதுரையில் நடைபெற்ற வரலாற்றுச் சிறப்புமிக்க நமது பொதுக்குழுவில், கழகத்தின் உறுப்பினர் சேர்க்கையை அதிகரிக்குமாறு நம் தலைவர் அவர்கள் கட்டளையிட்டார்கள். குறிப்பாக, தமிழ்நாடு முழுவதும் உள்ள ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும் 30 சதவிகித வாக்காளர்களை கழகத்தில் இணைக்கும் விதமாக `ஓரணியில் தமிழ்நாடு’ என்ற மாபெரும் முன்னெடுப்பை நம்முடைய தலைவர் தீர்மானமாக இயற்றி, நமக்குக் கட்டளை இட்டார்கள். இன்றைக்கு ஒரு சிறந்த அறிவுரையும் வழங்கி இருக்கிறார்கள்.

**காணொலிக் கூட்டம்!**

அந்தப் பணியை வேகப்படுத்தும் விதமாகத்தான் இன்றைய காணொலிக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கடந்த 4 ஆண்டுகால கழக ஆட்சியின் செயல்பாடுகள், நிறைவேற்றப்பட்ட திட்டங்களை, மக்களுக்கு எடுத்துச் சொன்னாலே நிச்சயம் ஒரு வாக்குச்சாவடிக்குக் குறைந்தது 30 சதவிகித வாக்காளர்களை இணைப்பது மிக எளிமையான பணிதான்.

ஒவ்வொரு வீட்டிலும் குறைந்தபட்சம் ஒரு பயனாளியாவது நம்முடைய அரசால் பயன்பெற்றவர் நிச்சயம் இருப்பார். மக்களைப் பொறுத்தவரை நாம் செய்யும் எல்லாவற்றையும் நினைவில் வைத்துக் கொண்டே இருக்க மாட்டார்கள். நாம்தான் அவர்களுக்கு அதை நினைவுபடுத்திக்கொண்டே இருக்க வேண்டும்.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், மகளிருக்கான கட்டணமில்லாப் பேருந்து வசதித் திட்டம், நான் முதல்வன், கலைஞர் கனவு இல்லம், புதுமைப்பெண் திட்டம், தமிழ்ப்புதல்வன் திட்டம், மக்களைத் தேடி மருத்துவம், நம்மைக் காக்கும் 48 என பல்வேறு திட்டங்களை மக்களுக்காக நாம் செயல்படுத்தி இருக்கிறோம். அதற்கெல்லாம் ஒரு முத்தாய்ப்பான திட்டம் என்றால், `கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம்’. ஒவ்வொரு மாதமும் கிட்டத்தட்ட ஒரு கோடியே 15 லட்சம் மகளிருக்கு இந்தத் திட்டத்தைக் கொண்டு சேர்க்கிறோம்.

**சாதனைத் திட்டங்கள்!**

அப்படி, நாம் செய்த சாதனைத் திட்டங்களை மக்களுக்கு நினைவுபடுத்துவதற்கான ஒரு நல்ல வாய்ப்பாக இந்த உறுப்பினர் சேர்க்கையைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். சட்டமன்றத் தேர்தலுக்கு இன்னும் 10 மாதங்களே இருப்பதால், இந்த உறுப்பினர் சேர்க்கையை ஒரு `மினி தேர்தல் பிரச்சாரம்’ போலவே கருதி, இந்தப் பணியை நாம் சிறப்பாகச் செய்து முடிக்க வேண்டும்.

தேர்தல் நேரங்களில் கடைசி நேர பிரச்சாரமாக டோர் ஸ்லிப்-ஐ எடுத்துக்கொண்டு, வீடு வீடாகச் சென்று வாக்கு சேகரிப்போம். அதேபோல கழக அரசின் சாதனை விளக்கத் துண்டறிக்கைகளை எடுத்துக் கொண்டு, திண்ணைப் பிரச்சாரம் போல, இந்த உறுப்பினர் சேர்க்கையை நடத்தினால், கழகத் தலைவர் கொடுத்து இருக்கின்ற இலக்கை நிச்சயம் நாம் அடைய முடியும்.

அப்படிச் செல்லும்போது 30 பேர், 40 பேர் என்று கூட்டமாகச் செல்லாமல், நான்கைந்து பேர் என்ற அளவில் அனைத்து வீடுகளுக்கும் ஏறி, இறங்கினால் நிச்சயம் இந்த இலக்கை அடைய முடியும்.

நான்கைந்து பேராகச் செல்லும்போது மக்களிடம் துண்டறிக்கையை வழங்கிவிட்டு, அவர்களுடன் உரையாடுவதற்கும் சிறந்த வாய்ப்பாக இருக்கும். அவர்களிடம் மனம்விட்டு பேசுங்கள். நிறைய சொல்வார்கள். குறைகளும் இருக்கும், அவற்றை காது கொடுத்துக் கேட்டு, குறித்துவைத்துக் கொள்ளுங்கள்.

அந்தப் பிரச்சினைகளை உங்களால் முடிந்தால், நீங்களே சரி செய்ய முடியுமா என்று பாருங்கள், இல்லையென்றால், உங்கள் மாவட்டச் செயலாளரிடமோ, அமைச்சர் பெருமக்களிடமோ கொடுத்து, அவற்றை நிறைவேற்றிக் கொடுங்கள். இல்லையென்றால், நம் தலைமைக் கழக ஒருங்கிணைப்புக் குழுவுக்குச் சொன்னாலும் அதை சரிசெய்வதற்கான முயற்சிகளில் நாம் ஈடுபடுவோம். அவர்களிடம் இப்படி நேரில் சந்தித்துப் பேசினீர்கள் என்றால், கழகத்தின் மீது மக்களுக்கு நிச்சயம் நம்பிக்கை வரும்.

நம்முடைய கழகத்தில் மாவட்டக் கழகம் தொடங்கி பாகம் வரை லட்சக் கணக்கான நிர்வாகிகள் உள்ளனர். குறிப்பாக, ஒவ்வொரு பாகத்திலும் 100 வாக்காளர்களுக்கு ஒரு பாக உறுப்பினரை நியமித்துள்ளோம்.

இளைஞர் அணியை எடுத்துக் கொண்டீர்கள் என்றால், ஒவ்வொரு பாகத்திற்கும் ஒரு இளைஞரை தேர்வு செய்து பயிற்சி கொடுத்து வருகிறோம்.

**உறுப்பினர் சேர்க்கை!**

அதேபோல மற்ற அணிகளிலும் ஒன்றியம்- நகரம்- பகுதி- பேரூர் வரை நிர்வாகிகள் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். இப்படி அனைத்து நிர்வாகிகளையும் கலந்து நியமித்து, `இந்த பாகத்திற்கு இத்தனை நிர்வாகிகள் பொறுப்பு’ என அறிவித்து, உறுப்பினர் சேர்க்கைக்கு வீடு வீடாகச் சென்றால் தலைவர் அறிவித்துள்ள காலக்கெடுவுக்குள் இலக்கை எளிதாக எட்டமுடியும்.

உங்களுடைய வீட்டில் இருந்தபடியே இந்த உறுப்பினர் சேர்க்கையைச் செய்துவிடக்கூடாது என்பதை மட்டும் மீண்டும் மீண்டும் உங்களிடம் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். அந்தத் தவற்றை நாம் செய்து விடக்கூடாது.

இளைஞர் அணியைப் பொறுத்தவரை ஒன்றியம்- நகரம்- பகுதி- பேரூர் வாரியாக அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அனைத்து மாவட்டங்களுக்குமான அறிவிப்பும் `முரசொலி’யில் வந்து விட்டது.

அவர்களுக்கு கருத்தியல் ரீதியாகவும் சரி, களத்தில் பணியாற்றுவதாக இருந்தாலும் சரி, எப்படிப் பணியாற்ற வேண்டும் என்ற பயிற்சிகளைக் கொடுத்து வருகிறோம். அதுமட்டுமல்ல, சமூக வலைத்தளங்களில் எப்படிச் செயலாற்ற வேண்டும் என்ற பயிற்சியும் ஒவ்வொரு மாவட்டமாக வழங்கப்பட்டு வருகிறது.

சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கும் சமூக வலைத்தளப் பயிற்சியை இளைஞர் அணி சார்பில் வழங்கிக் கொண்டிருக்கிறோம். இளைஞர் அணிக்கு, தற்போது ஊராட்சிக் கிளைகள், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி வார்டுகளுக்கு நிர்வாகிகளை மாவட்டச் செயலாளர்கள் பரிந்துரை செய்து வருகிறார்கள்.

**தேர்தல் பணி!**

ஓரிரு மாவட்டங்களில் இருந்து அந்தப் பரிந்துரைப் பட்டியல் அன்பகத்துக்கு வந்துள்ளது. மற்ற மாவட்டங்களில் இருந்தும் விரைவாக அந்தப் பட்டியலை வழங்கினால், அவர்களை நியமிக்க வசதியாக இருக்கும். இது தேர்தல் நேரத்தில் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். தேர்தல் பணியில் அவர்களையும் நாம் முழுவீச்சில் பயன்படுத்தலாம். அவர்கள் களத்தில் உங்களுக்குப் பக்கபலமாக, ஆக்டிவாகப் பயன்படுவார்கள் என்ற முழுநம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. அதற்கான உத்தரவாதத்தை நான் தருகிறேன்.

வருகின்ற சட்டமன்றத் தேர்தல் நமக்கு மிக மிக முக்கியமான தேர்தல் என்பது உங்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும். பாசிச பா.ஜ.க. அரசுடன் இந்தியாவிலேயே கருத்தியல் ரீதியாகப் போட்டி போடக் கூடிய ஒரே இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம், ஒரே தலைவர் நம்முடைய கழகத் தலைவர் என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள்.

அதன் காரணமாகவே தான் நம்முடைய திராவிட மாடல் அரசை எப்படியாவது வீழ்த்தி விட வேண்டும் என்று பாசிச பா.ஜ.க. அரசு துடித்துக் கொண்டிருக்கிறது. அதற்காகதான் எதிர்க்கட்சிகளை எல்லாம் தொடர்ந்து மிரட்டி மிரட்டி, தங்கள் அணியில் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஊடகங்களில் அதையெல்லாம் நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

குறிப்பாக, எதிர்க்கட்சி அ.தி.மு.க-வை எடுத்துக்கொள்ளுங்கள். நாடாளுமன்றத் தேர்தலின்போது என்ன சொன்னார்கள்? பாசிச பா.ஜ.க-வுடன் இனி, எந்தக் காலத்திலும் கூட்டணி கிடையாது என்று சொன்னார்கள். ஆனால், இப்போது என்ன நடந்துகொணடு இருக்கிறது?

**கருத்தியல் எதிரி!**

இப்படி நம்மை எதிர்க்க எந்த எல்லைக்கும் போக இந்த பாசிச பா.ஜ.க. துணிந்திருக்கிறது. ஏனென்றால், நாம்தான் பாசிச பா.ஜ.க-வுக்குக் கருத்தியல் ரீதியான எதிரி. நம்மை எதிர்கொள்ளவே முடியாமல் திணறுகிறது பா.ஜ.க. அதற்கு காரணம் நம்முடைய தலைவர் அவர்கள்தான். சென்னை மெட்ரோ ரயில் இரண்டாம் கட்ட திட்டத்திற்கு நிதியை விடுவிக்காமல், எவ்வளவு முடியுமோ அவ்வளவு காலதாமதம் செய்தார்கள். ஆனால், நிறுத்தாமல் பணியைத் தொடர்ந்தது நம்முடைய கழக அரசும், நம் தலைவர் அவர்களும் தான்.

மும்மொழிக் கொள்கையை அமல்படுத்தினால்தான் ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வித் திட்டத்திற்கான நிதியைத் தருவோம் என்று பாசிச பா.ஜ.க. அரசு சொன்னது. நீங்கள் இரண்டாயிரம் கோடி அல்ல, பத்தாயிரம் கோடி ரூபாய் தந்தாலும், உங்களின் மும்மொழிக் கொள்கையை அமல்படுத்த முடியாது என்று கூறிவிட்டார் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்.

அப்படி, தமிழ்நாட்டு நலனுக்கு எதிராக எந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தாலும், அதை உறுதியுடன் எதிர்ப்பவர் நம் தலைவர் அவர்கள். தமிழ்நாட்டு நலனுக்காக நாம் கொண்டுவரும் திட்டங்களுக்கு பாசிச பா.ஜ.க. நேரடியாகவோ அல்லது ஆளுநரோ மூலமாகவோ என்ன முட்டுக்கட்டை போட்டாலும் அதைத் தகர்த்து, நீதிமன்றம் வரை சென்று திட்டங்களை நிறைவேற்றி வருகிறார் நம் முதலமைச்சர் அவர்கள்.

அதற்குக் கழகத் தொண்டர்களின் ஆதரவும், நிர்வாகிகளான உங்களின் தொடர் செயல்பாடுகளும் தான் காரணம். அத்தகைய வலிமைமிக்க நமது தொண்டர்களை உற்சாகமாக, அரவணைத்துச் சென்று, மதுரை பொதுக்குழுவில் கழகத் தலைவர் நமக்குக் கொடுத்திருக்கும் கட்டளையை நிறைவேற்ற வேண்டும்.

**இளைஞர் அணி!**

அதற்கு இளைஞர் அணி களத்தில் உங்களுக்கு உறுதுணையாக இருக்கும் என்ற உறுதிமொழியை நான் தருகிறேன். இளைஞர் அணி நிர்வாகிகளை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கிறேன். இளைஞர் அணியில் உள்ள இளைஞர்கள் மட்டுமல்ல, பொதுவாக நம் இயக்கத்தில் உள்ள அனைத்து இளைஞர்களையும் நீங்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கழகத் தலைவர் அவர்களின் தொடர் வெற்றிக்கு உங்கள் அனைவரின் உழைப்பும்தான் காரணம். இத்தனை வெற்றிகளையும்விட, வரும் சட்டமன்றத் தேர்தலின் வெற்றி மிகமிக முக்கியமான வெற்றியாகும்.

அதற்கு நிர்வாகிகளுக்குள் இருக்கும் சிறு சிறு முரண்களை மறந்து, கருத்து வேறுபாடுகளை கடந்து நாம் அனைவரும் ஓரணியில் நின்று பணியாற்ற வேண்டியது மிக மிக அவசியம்.

நம் கழகம் 7-வது முறையாக வெற்றிபெற்று, நம் கழகத் தலைவர் அவர்களை 2-வது முறையாக முதலமைச்சர் ஆக்குவதே நம் அனைவரின் ஒரே இலக்கு. அதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்து பாடுபட உறுதியேற்போம். `ஓரணியில் தமிழ்நாடு’ என்று தலைவர் சொல்லியிருக்கின்ற இந்தத் திட்டத்தை வெற்றிபெற வைத்துவிட்டோம் என்றால், வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் பாதி வெற்றியை அடைந்துவிட்டோம் என்பது முடிவாகிவிடும். எனவே, அதை மட்டுமே மனதில் வைத்து ஒன்றிணைந்து பாடுபட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நிகழ்வில் பேச வாய்ப்பளித்த கழகத் தலைவர் அவர்களுக்கும், பங்கேற்ற அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு அவர் எழுச்சிமிக்க உரையாற்றினார்.

---

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! எஸ்.ராஜசேகர் தலைமை!

## துறைமுகம் மேற்கு பகுதி சார்பில் ‘செம்மொழி நாள்’ மாபெரும் நலத்திட்ட உதவிகள்!

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்குகிறார்!

*சென்னை, ஜுன்.8-*

*சென்னை கிழக்கு மாவட்ட திமுக, துறைமுகம் மேற்கு பகுதி சார்பில், ஜுன் 3 முத்தமிழறிஞரின் 102 வது பிறந்தநாள் “செம்மொழி நாள்” விழாவை முன்னிட்டு - மாபெரும் நலத்திட்ட உதவிகளை தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்குகிறார்.*

*சென்னை கிழக்கு மாவட்ட திமுக, துறைமுகம் தொகுதி சார்பில் ஜுன் 3 முத்தமிழறிஞரின் 102 வது பிறந்த நாள் செம்மொழி நாளை முன்னிட்டு “செம்மொழி - 4” கலைஞரை மனதில் கொள்வோம்! புதியதோர் உலகு செய்வோம்! எனும் தலைப்பில் மாபெரும் நலத்திட்ட விழா நாளை (09.06.2025 - திங்கட்கிழமை) அன்று இடம்: 1. சென்னை தீவுத்திடல் புதிய ஆட்டோக்கள் வழங்குதல்*

*கழக மகளிருக்கு இருசக்கர வாகனம் வழங்குதல்*

*மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட ஸ்கூட்டர் வழங்குதல். மீன்பாடி வண்டி வழங்குதல் டிபன் கடை வண்டி வழங்குதல். இடம்: 2: பின்னி மைதானம், அரண்மனைக்காரத் தெரு, பாரிமுனை கழக மூத்த முன்கோடி களுக்கு பொற்கிழி வழங்குதல் மாணவ - மாணவியருக்கு கல்வி ஊக்கத்தொகை வழங்குதல்*

*அன்னை தயாளு அம்மாள் தொண்டு நிறுவனத்தில் தையல் பயிற்சி பெற்றவர்களுக்கு தையல் இயந்திரம் மற்றும் சான்றிதழ் வழங்குதல்.*

*Tally பயின்றவர்களுக்கு மடிக்கணினி மற்றும் சான்றிதழ் வழங்குதல்*

*இந்நலத்திட்ட விழாவில் பகுதிக் கழகச் செயலாளர் எஸ்.ராஜசேகர் தலைமை வகிக்கிறார்.*

*சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத் துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, எஸ்.முரளி, எஸ்.இராஜசேகர், இரா.நரேந்திரன், ஜி.எம். தேவன், பி.ஸ்ரீராமுலு, இசட். ஆசாத், எம்.பி.எம். சேக்அப்துல்லா, ஆர்.கலைச்செல்வி, எம்.இ.கனி, எல்.சம்பத்குமார், எம்.வினாயகம், பி.விஜயகுமார், ராஜேஷ் ஜெயின், பா.ஜெகதீஷ் முன்னிலை வகிக்கின்றனர்.*

*துறைமுகம் மேற்கு கிழக்கு வட்ட கழக செயலாளர்கள்: மா.ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர்.ரவிச்சந்திரன்பா, அண்ணாதுரை, ஜி.ராமமூர்த்தி, எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.ஏ.அஸ்லாம், டி.கதிரவன், எம்.பரத்குமார் ஆகியோர் வரவேற்கின்றனர். இம்மாபெரும் நலத்திட்ட விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்குகிறார்.*

*மேலும், இந்நலத்திட்ட விழாவில் மேயர் பிரியா ராஜன், ப.தாயகம்கவி எம்.எல்.ஏ, ஏ.வெற்றியழகன், எம்.எல்.ஏ, ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, ப.ரங்கநாதன், கே.எஸ். ரவிச்சந்திரன், பி.கே.மூர்த்தி, கே.சந்துரு, கே.எஸ்.எம்.நாதன், சி. மகேஷ்குமார். மாவட்ட நிர்வாகிகள்: கோ.ஏகப்பன், தேவஜவஹர், புனிதவதி எத்திராசன், பகுதி கழக செயலாளர்கள்: ஐசினப்.வ. முரளிதான், எ.நாகராசன் எம்.சி., செ.தமிழ்வேந்தன், எம். சாமிக்கண்ணு, வே.வாசு, கூ.பி.ஜெயின், சொ.வேலு எம்.சி.வி.சுதாகர் டிஎஸ்பி. ராஜகோபால் எம்.சி, எம். டி.ஆர்.நாகராஜன். சுதா தீனதயாளன். ராஜேஸ்வரி ஸ்ரீதர், வானவில் விஜய், ந.துலுக்காணம், பி.உதயசங்கர், தாமோதரன், எல்.பி.எஃப் மோகன், பெரோஸ்கான், வெ.பரிமளம், எல்.நவீன். பகுதி கழக நிர்வாகிகள்: மே.ஜனார்தனன், கே.ஆர்.அபரஞ்சி, ம.முத்துக்குமார், ந.சுந்தரம் எஸ்.சந்தியாகு, செ.தமிழ்வாணன், வி.சந்தானலட்சுமி, சி.ப.ஜெயராமன் பூக்கடை. எஸ்.வெங்கடேசன், எல்.சாந்திலால், லண்டன் முருகன் ஆகியோர் சிறப்பிக்கின்றனர்.*

*இந்நலத்திட்ட விழாவில் வட்ட கழக செயலாளர் ஆ.நா.பார்த்திபன், கே.கவியரசு நன்றி கூறுகிறார்கள்.*

---

### ‘வாட்ஸ் அப்’பில் வரும் செய்தி!

